## 13. தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்

---

### 13.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### 13.1.1 பாதீட்டு முரண்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 400,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதினொரு செலவின விடயங்களுக்கு ரூபா 6,700,000 மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 13.2 உள்ளகக் கணக்காய்வு

---

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படவில்லை.

### 13.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

ஆணைக்குழு அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 13.4 மனிதவள முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 06 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 44 | 24 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 09 | 04 |
| | மொத்தம் | 76 | 42 | 34 |